செய்தி வெளியீடு எண் : 1168 நாள் : 13.07.2022

செய்தி வெளியீடு

**தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.07.2022) தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான வேளாண் உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது**

2021–2022 ஆம் ஆண்டின் வேளாண் நிதிநிலை அறிக்கையில், விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான வேளாண் உயர்நிலைக் குழு ஒன்று உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகவும், வேளாண் உற்பத்தி ஆணையர் (ம) அரசு செயலர் அவர்கள் உறுப்பினர் செயலராகவும், நிதி, வருவாய், கூட்டுறவு, நீர்வளம், கால்நடைப் பராமரிப்பு, சுற்றுச்சூழல், ஊரக வளர்ச்சி, கைத்தறி மற்றும் எரிசக்தி போன்ற சகோதரத் துறை செயலர்களை உறுப்பினர்களாகவும் அமைக்கப்பட்ட மாநில அளவிலான வேளாண் உயர்நிலைக்குழுவின் முதல் கூட்டம் இன்று (13.07.2022) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வேளாண்மை–உழவர் நலத்துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் முன்னேற்ற விபரம், நடப்பாண்டில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி, பயிர் காப்பீட்டுத் திட்டம், நடப்பாண்டில் விதைகள், உரங்கள், தோட்டக்கலைத் துறை இடுபொருட்கள் விவசாயிகளுக்கு தங்குதடையின்றி கிடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், இயற்கை வேளாண்மை, குறுவை நெல் சாகுபடிக்காக துறை மேற்கொண்டு வரும் பணிகள், எதிர்வரும் மாதத்தில் எதிர்பார்க்கப்படும் தோட்டக்கலை விளைபொருட்கள் குறிப்பாக, தக்காளி, வெங்காயம் போன்ற விளைபொருட்கள் அறுவடை மற்றும் இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணம், பூச்சி நோய் தாக்குதலுக்கான ஆயத்த பணிகள் குறித்த விபரங்கள் விரிவாக விவாதிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, நீர்வளம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை போன்ற துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் உழவர் நலன் சார்ந்த பணிகளும் விரிவாக விவாதிக்கப்பட்டன.

தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் கூறுகையில், வேளாண்மையில் தற்போதுள்ள சவால்களை எதிர்கொள்ளும் வகையில், தமிழகத்திற்கென "வேளாண் கொள்கை" ஒன்று, வேளாண் சார்ந்த அனைத்து துறைகளையும் கலந்தாலோசித்து உருவாக்கப்பட வேண்டும் என்றும், குறைந்த நீரில் விவசாயிகளுக்கு அதிக வருமானம் தரக்கூடிய பயிர்களை சாகுபடி செய்வது, வேளாண் இயந்திரமயமாக்குதல், புதிய இரகங்களை அறிமுகப்படுத்துதல், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவது, உற்பத்தி செய்த விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்வது, வேளாண்மையில் உள்ள அனைத்து பணிகளையும் கணினிமயமாக்கி, விவசாயிகளுக்கு வேண்டிய தகவல்களை உடனுக்குடன் வழங்குவது, கால்நடை உள்ளிட்ட வேளாண் சார்ந்த தொழில்கள் மூலம் விவசாயிகளின் வருமானம் உயர்த்தத் தேவையான உத்திகளை வகுப்பது போன்ற விபரங்களை உள்ளடக்கிய வேளாண்மைக் கொள்கை ஒன்று உருவாக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அவர்கள் அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கினார்கள்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in